www.Padasalai.Net

மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மற்றும்
பள்ளிக்கல்வி இயக்குநரின் இணைச் செயல்முறைகள்,
சென்னை –06

ந.க.எண்.76896/PD1/S3/2017, நாள். 02.07.2024

பொருள் : பள்ளிக் கல்வி – மாநில மதிப்பீட்டு புலம் – மாவட்டம் தோறும் 6 முதல் 12 வகுப்பு வரை மதிப்பீடு சார்ந்த வினாடி வினா நடத்துதல், வழிகாட்டி நெறிமுறைகள் – சார்ந்து.

பார்வை : சென்னை –6, மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநரின் இணைச் செயல்முறைகள் ந.க.எண். 3375/அ4/ Assessment/SS/2023, நாள்.28.06.2024

.......

தமிழ்நாடு அரசின் முன்னோடித் திட்டங்களில் ஒன்றான "மாநில மதிப்பீட்டுப் புலம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது. உயர் தொழில்நுட்ப ஆய்வகத்தில் நடத்தப்படும் மதிப்பீடானது மாணவர்களின் கற்றல் திறனை அறிந்து அவர்களின் கற்றல் திறனை அதிகப்படுத்த உதவுவது ஆகும். மாணவர்களை கணினி வழி போட்டித்தேர்வுகளுக்கு தயார்படுத்தும் விதமாகவும், உயர் திறன் கேள்விகளுக்கு பதிலளிக்க பழக்கும் விதமாகவும் இந்த வினாடி வினா மதிப்பீடு நடத்தப்படுகிறது. மாணவர்கள் பயிற்சி வினாக்களுக்கு மட்டுமல்லாமல் பாடத்தினுள் இருந்து கேட்கப்படும் உயர் திறன் வினாக்களுக்கும் பதிலளிக்கும் பயிற்சியாகவும் இந்த மதிப்பீடு அமைந்துள்ளது.

இது தொடர்பாக உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் அமைந்துள்ள அனைத்துப் பள்ளிகளிலும் கணினி வழி வினாடி வினா நடத்துதல் தொடர்பாக பின்வரும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

1. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் உள்ள உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் அமைந்துள்ள அனைத்து அரசுப் பள்ளிகளிலும் இணைப்பு – 1 இல் உள்ளவாறு 6 முதல் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான வினாடி வினா நிகழ்வுகளை நடத்த வேண்டும்.
2. இந்த வினாடி வினா நிகழ்வை உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள் அமைந்துள்ள அரசுப் பள்ளிகளில் நடத்த வேண்டும்.
3. உயர் தொழில்நுட்ப ஆய்வகத்தில் ஏற்படும் தொழில்நுட்பக் குறைபாடுகள், வினாத்தாள்களை உருவாக்கும்போது ஏற்படும் சிக்கல்களுக்குத் தீர்வு காண 14417 என்ற கட்டணமில்லாத் தொலைபேசிச் சேவையைப் பயன்படுத்த ஆசிரியர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

www.Padasalai.Net

4. ஒரு பாடத்திற்கு 4 வினாக்கள் வீதம் 5 பாடத்திற்கு மொத்தம் 20 வினாக்கள் கொண்ட வினாத்தாளை உருவாக்க வேண்டும். மாணவர்களுக்கு 30 நிமிடம் கால அளவாக நிர்ணயிக்க வேண்டும்.
5. 11 மற்றும் 12ஆம் வகுப்பிற்கு ஒரு பாடத்திற்கு 4 வினாக்கள் வீதம் 6 பாடத்திற்கு மொத்தம் 24 வினாக்கள் கொண்ட வினாத்தாளை உருவாக்க வேண்டும்.
6. உயர்தொழில் நுட்ப ஆய்வகம் அமைந்துள்ள பள்ளிகளில் உள்ள அனைத்து ஆசிரியர்களும் இணைப்பு – 2 இல் உள்ள வழிமுறைகளில் புலமை பெற்றிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
7. உயர்தொழில்நுட்ப ஆய்வகம் வழியாக தொடர்ச்சியாக வினாடி வினா நடைபெறுவதை அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் உறுதி செய்ய வேண்டும்.

இணைப்பு –1–இல் உள்ளவாறு காலஅட்டவணை மற்றும் இணைப்பு 2–இல் உள்ளவாறு வழிகாட்டு நெறிமுறைகள் பின்பற்றுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

<u>இணைப்பு:</u>

1. வினாடி வினா மதிப்பீடு நடத்துவதற்கான அட்டவணை
2. வழிகாட்டு நெறிமுறைகள்

இயக்குநர்,
பள்ளிக் கல்வித் துறை.

மாநிலத் திட்ட இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி

9/10

2/7/24

பெறுநர்:

1. அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள்

நகல்

1. செயலர், பள்ளிக்கல்வித் துறை, சென்னை –09
அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.
2. இயக்குனர், மாநில ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை –06
(அவர்களுக்குத் தகவலுக்காகப் கனிவுடன் அனுப்பப்படுகிறது)
3. இயக்குநர், தொடக்கக்கல்வி இயக்ககம், சென்னை –06
(அவர்களுக்குத் தகவலுக்காகப் கனிவுடன் அனுப்பப்படுகிறது)

www.Padasalai.Net

இணைப்பு -1

Assessment Rollout - Cycle 01 - Schedule for all Districts

| Class | Assessment Date | Day |
|---|---|---|
| 6 | 09.07.2024 | Tuesday |
| 7 | 10.07.2024 | Wednesday |
| 8 | 11.07.2024 | Thursday |
| 9 | 12.07.2024 | Friday |
| 10 | 15.07.2024 | Monday |
| 11 | 16.07.2024 | Tuesday |
| 12 | 18.07.2024 | Thursday |

[Note: Absent or Not completed students can attend the assessment on the next working day]

Assessment Rollout - Cycle 02 - Schedule for all Districts

| Class | Assessment Date | Day |
|---|---|---|
| 6 | 06.08.2024 | Tuesday |
| 7 | 07.08.2024 | Wednesday |
| 8 | 08.08.2024 | Thursday |
| 9 | 09.08.2024 | Friday |
| 10 | 12.08.2024 | Monday |
| 11 | 13.08.2024 | Tuesday |
| 12 | 14.08.2024 | Wednesday |

[Note: Absent or Not completed students can attend the assessment on the next working day]

www.Padasalai.Net

Assessment Rollout - Cycle 03 - Schedule for all Districts

| Class | Assessment Date | Day |
|---|---|---|
| 6 | 05.11.2024 | Tuesday |
| 7 | 06.11.2024 | Wednesday |
| 8 | 07.11.2024 | Thursday |
| 9 | 08.11.2024 | Friday |
| 10 | 12.11.2024 | Monday |
| 11 | 13.11.2024 | Tuesday |
| 12 | 15.11.2024 | Thursday |

[Note: Absent or Not completed students can attend the assessment on the next working day]

Assessment Rollout - Cycle 04 - Schedule for all Districts

| Class | Assessment Date | Day |
|---|---|---|
| 6 | 10.02.2025 | Monday |
| 7 | 12.02.2025 | Wednesday |
| 8 | 13.02.2025 | Thursday |
| 9 | 14.02.2025 | Friday |

[Note: Absent or Not completed students can attend the assessment on the next working day]

www.Padasalai.Net

## இணைப்பு –2

## வழிகாட்டு நெறிமுறைகள்

உதவித் திட்ட அலுவலர் (APO)

- உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் அமைந்துள்ள அனைத்து பள்ளிகளிலும் இணைப்பு 1–இல் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணைப்படி வினாடி வினா மதிப்பீடுகள் நடைபெறுவதற்குத் தேவையான ஆயத்தப் பணிகள் நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும்.
- பள்ளிகள் தோறும் மதிப்பீடுகள் நடைபெறுவது தொடர்பான விவரங்களை உடனுக்குடன் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்குத் தெரிவிக்க வேண்டும்.

மாவட்ட ஒருங்கிணைப்பாளர் – மதிப்பீடு *மற்றும்* மாவட்ட ஒருங்கிணைப்பாளர் – உயர்தொழில்நுட்ப ஆய்வகம் (DC Assessment *and* DC HiTech Lab):

- உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் அமைந்துள்ள அனைத்து பள்ளிகளிலும் வினாடி வினா மதிப்பீடு நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும்.
- உயர்தொழில் நுட்ப ஆய்வகத்தில் ஹார்ட்வர்[Hardware] அல்லது இன்டர்நெட் குறைகள் இருப்பின் Field Engineer உதவியுடன் அதை சரி செய்ய வேண்டும்.

தலைமையாசிரியர்:

- உயர் தொழில்நுட்ப ஆய்வகத்தில் சர்வர் கணினியை எப்பொழுதும் ON செய்து வைத்திருக்க வேண்டும்.
- உயர் தொழில்நுட்ப ஆய்வகத்தை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.
- வினாத்தாள் உருவாக்குதல் நிகழ்வு வினாடி வினா மதிப்பீடு நடைபெறுவதற்கு 2 நாட்களுக்கு முன்பாகவே முடிக்கப்படுவதை தலைமை ஆசிரியர் உறுதி செய்ய வேண்டும்.
- வினாடி வினா மதிப்பீடு கால அட்டவணை அனைத்து மாணவர்களுக்கும் தெரியப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துங்கள்.
- தலைமை ஆசிரியர் வினாத்தாள் உருவாக்குதல் நிகழ்வு நடைபெற்றதையும், மாணவர்களுக்கு மதிப்பீடு வினாடி வினா நடைபெற்றதையும் DC மற்றும் CEO அலுவலகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.

www.Padasalai.Net

- இணைப்பு 1-இல் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் படி வினாடி வினாவிற்கான நிகழ்வுகள்[Event Creation] மதிப்பீட்டுப் புலத்தால்[Assessment Cell] உருவாக்கப்படும். எனவே ஆசிரியர்கள் எந்த ஒரு நிகழ்வுகளையும்[Event Creation] உருவாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வகுப்பாசிரியர்:

- பிற பாட ஆசிரியர்களுடன் கலந்தாலோசித்து வகுப்பாசிரியர் மட்டுமே வினாத்தாள் உருவாக்கும் நிகழ்வை மேற்கொள்ள வேண்டும்.
- வினாத்தாள் உருவாக்கிய பின்னர் மாற்ற இயலாது என்பதால் மிகக் கவனமுடன் வினாத்தாள் உருவாக்கும் நிகழ்வை மேற்கொள்ள வேண்டும்.
- உயர் தொழில்நுட்ப ஆய்வகத்தில் ஏற்படும் ஐயங்களையும் குறைகளையும் போக்க 14417 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தெரிவிக்க வேண்டும்.
- ஒரு பாடத்திற்கு 4 வினாக்கள் வீதம் 5 பாடத்திற்கு மொத்தம் 20 வினாக்கள் கொண்ட வினாத்தாளை உருவாக்க வேண்டும். மாணவர்களுக்கு 30 நிமிடம் கால அளவாக நிர்ணயிக்க வேண்டும்.
- 11 மற்றும் 12ஆம் வகுப்பிற்கு ஒரு பாடத்திற்கு 4 வினாக்கள் வீதம் 6 பாடத்திற்கு மொத்தம் 24 வினாக்கள் கொண்ட வினாத்தாளை உருவாக்க வேண்டும்.
- வினாடி வினா மதிப்பீடு முடிந்த பிறகு விடைத்தாளை லோக்கல் சர்வர்- இல் [local server] ஆசிரியர் டாஷ்போர்டில் [dashboard] இருந்து பதிவிறக்கம் செய்து வகுப்பில் மாணவர்களுடன் விவாதியுங்கள்.
- ஆசிரியர்கள் வினாடி வினா மதிப்பீடு நடைபெறும் நேரத்தில் வினாக்களுக்கு பதிலளிக்க சிரமப்படும் மாணவர்களுக்கு அவர்கள் புரிந்து பதிலளிக்க உதவுவதற்கு மாறாக, வினாடி வினா முடிவடைந்த பின்பு மாணவர்கள் சிரமப்படும் பாடப்பகுதிகளை அறிந்து அவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும்.
- ஆசிரியர்கள் மதிப்பீடு முடிந்த பிறகு மாணவர்களின் மதிப்பெண்களையும், விடைக்குறிப்புகளையும் தரவிறக்கம் செய்து கொண்டு கற்றல் திறனில் முன்னேற்றம் தேவைப்படும் மாணவர்களுக்கு உதவ வேண்டும்.

www.Padasalai.Net

உயர்தொழில் நுட்ப ஆய்வக ஒருங்கிணைப்பாளர்:

- இணைப்பு 1 – இல் கொடுக்கப்பட்டுள்ள காலஅட்டவணையின் படி வினாடி வினா மதிப்பீடுகள் உயர்தொழில் நுட்ப ஆய்வகத்தில் நடைபெறுவதை உறுதிசெய்தல் வேண்டும்.
- உயர்தொழில் நுட்ப ஆய்வகத்தில் ஹார்ட்வர்[Hardware] அல்லது இன்டர்நெட் குறைகள் இருப்பின் Field Engineer உதவியுடன் அதை சரி செய்ய வேண்டும்.

இயக்குநர்,,
பள்ளிக் கல்வித் துறை,
சென்னை–06

மாநிலத் திட்ட இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
சென்னை –06


www.Padasalai.Net


# <u>உயர் தொழில் நுட்ப ஆய்வகங்களின் வழி வினாடி வினா மதிப்பீடுகள்:</u>

## <u>General Instructions:</u>

- உயர் தொழிநுட்ப ஆய்வகத்தில் சர்வர் கணினியை எப்பொழுதும் **ON** செய்து வைத்திருக்கவும்.
- உயர் தொழில்நுட்ப ஆய்வகத்தை சுத்தமாக வைத்திருங்கள்.
- உயர் தொழிநுட்ப ஆய்வகத்தில் ஏற்படும் சந்தேகக்கங்களையும் குறைகளையும் **14417** என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு தெரிவிக்கவும்.
- வகுப்பாசிரியர் மட்டுமே வினாத்தாள் உருவாகுதல் நிகழ்வை மேற்கொள்ள வேண்டும். மதிப்பீட்டு தேர்வு நடைபெறுவதற்கு இரண்டு நாள் முன்பாவது வினாத்தாள் உருவாக்கும் நிகழ்வை முடித்திருக்க வேண்டும்.
- வினாத்தாள் உருவாக்குதல் நிகழ்வு நடைபெறுவதை தலைமை ஆசிரியர் உறுதி செய்ய வேண்டும்.
- தலைமை ஆசிரியர் வினாத்தாள் உருவாக்குதல் நிகழ்வு நடைபெற்றதையும் , மாணவர்களுக்கு மதிப்பீடு வினாடி வினா நடைபெற்றதையும் **DC** மற்றும் **CEO** அலுவலகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.


1. பள்ளிகளில் அமைந்துள்ள உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் (HiTech Labs) அனைத்தையும் முதலில் சர்வர் கணினியைக் கொண்டு இணைய வழியில் பதிவு செய்திருக்க வேண்டும். இதற்கு சர்வர் கணினியில் உள்ள இணைய உலாவியைத் (Firefox web browser) திறந்து **http://locsrv.in:8080** என்னும் இணைய முகவரியைப் பயன்படுத்த வேண்டும். இது ஒரு முறை மட்டுமே மேற்கொள்ள வேண்டிய செயலாகும். இந்த இணையதளம் உயர்தொழில்நுட்ப ஆய்வகங்களில் மட்டுமே செயல்படக் கூடியது.








2. சர்வர் கணினியை முறையாகப் பதிவு செய்திருப்பின், அடுத்த முறை **http://locsrv.in:8080** என்னும் இணைய முகவரியைத் திறந்தால், நம் பள்ளியின் பெயரும் UDISE எண்ணும் திரையில் தெரியும். இதில் ஏதேனும் பிழைகள் இருந்தால் தொலைபேசிகளின் வழியாக 14417 என்னும் எண்ணைத் தொடர்பு கொண்டும் குறையைத் தெரிவிக்கலாம்.

3. ஒருமுறையேனும் உயர்தொழில்நுட்ப ஆய்வகத்தின் சர்வர் கணினியில் தலைமை ஆசிரியரின் **EMIS ID** அல்லது பள்ளியின் **UDISE** எண் மற்றும் **Password** வழியாக உள்நுழைய வேண்டும். அங்கு வலப்பக்கத்தில் உள்ள **Manage** பட்டனைச் சொடுக்கி **Update Credentials** பிரிவில் உள்ள **Update** பட்டனைச் சொடுக்க வேண்டும். இது ஒருமுறை மட்டுமே பயன்படுத்த வேண்டிய நிகழ்வாகும். இதற்குப் பின் சரவர் கணினியில் நம் EMIS ID ஐ விட்டு வெளியேறலாம்.



4. ஒருமுறையேனும் உயர்தொழில்நுட்ப ஆய்வகத்தின் சர்வர் கணினியில் தலைமை ஆசிரியரின் **EMIS ID** அல்லது பள்ளியின் **UDISE** எண் மற்றும் **Password** வழியாக உள்நுழைய வேண்டும். அங்கு வலப்பக்கத்தில் உள்ள **Manage** பட்டனைச் சொடுக்கி **Fetch Events** பிரிவில் உள்ள **Update** பட்டனைச் சொடுக்க வேண்டும். இது ஒருமுறை மட்டுமே பயன்படுத்த வேண்டிய நிகழ்வாகும். இதற்குப் பின் சரவர் கணினியில் நம் EMIS ID ஐ விட்டு வெளியேறலாம்.



5. உயர் தொழில்நுட்ப ஆய்வகங்களில் வினாடி வினா நடத்துவதற்கு, முதற்கட்டமாக https://exam.tnschools.gov.in என்னும் இணையதளத்தை பயன்படுத்த வேண்டும். இந்த இணையதளத்தை உயர் தொழில்நுட்ப ஆய்வகம் மட்டுமன்றி இணையத் எந்தக் கணினி / கைப்பேசி மூலமாகவும் அணுக முடியும். ( குறிப்பு: இதற்கு முன்பாக EMIS வழியாகப் பயன்படுத்திய exams.tnschools.gov.in என்னும் முகவரியைப் பயன்படுத்தக்கூடாது. )

6. தற்பொழுது https://exam.tnschools.gov.in எனும் இணையதளத்தில் உள்நுழைந்து அன்றைய தினம் தேர்வு நடைபெறும் வகுப்பின் வகுப்பு ஆசிரியர் தனது EMIS ID மற்றும் Password அல்லது பள்ளியின் UDISE எண் மற்றும் Password பயன்படுத்தி உள்நுழைய வேண்டும். அதில் **Event** எனும் தளத்தில் உங்கள் வகுப்பிற்கான


தேர்வு உருவாக்கப்பட்டு இருக்கும். அதில் **offline** எனும் தளத்தினை தேர்வு செய்ய வேண்டும். அதில் **QP allocation** எனும் தளத்தினை தேர்வு செய்ய வேண்டும்.

7. தற்பொழுது நாம் வினாத்தாள் உருவாக்கும் தளத்தில் இருக்கிறோம். வகுப்பாசிரியர் மட்டுமே வினாத்தாள் நிகழ்வை உருவாக்க வேண்டும். அனைத்து பாடங்களுக்குமான வினாக்களையும் பிற பாட ஆசிரியர்களுடன் கலந்தாலோசித்து வகுப்பாசிரியர் மட்டுமே தேர்ந்தெடுக்க வேண்டும்.

8. ஒரு பாடத்திற்கு **4** வினாக்கள் வீதம் **5** பாடத்திற்கு மொத்தம் **20** வினாக்கள் கொண்ட வினாத்தாளை உருவாக்க வேண்டும். மாணவர்களுக்கு **30** நிமிடம் கால அளவாக நிர்ணயிக்க வேண்டும்.

**9. 11** மற்றும் **12**ஆம் வகுப்பிற்கு ஒரு பாடத்திற்கு **4** வினாக்கள் வீதம் **6** பாடத்திற்கு மொத்தம் **24** வினாக்கள் கொண்ட வினாத்தாளை உருவாக்க வேண்டும்.


10. அங்கு நாம் உருவாக்கவுள்ள வினாத்தாளின் வகை குறித்து கே ட்கப்பட்டுள்ள களங்களை நிரப்பி **SEARCH** பட்டனைச் சொடுக்க வேண்டும்.





11. அதற்குக் கீழ் வெளிவரும் பாடத்தலைப்புகளைத் தேவைக்கேற்பத் தேர்ந்தெடுத்துக் கொண்டு **CREATE** பட்டனைச் சொடுக்கி ஒரு குழுவை உருவாக்க வேண்டும்.





12. இதே போல மீண்டும் ஒரு முறை அதே பாடத் தலைப்பையோ அல்லது பிற தலை ப்புகளையோ தேர்ந்தெடுத்து மீண்டும் ஒரு குழுவை உருவாக்க வேண்டும். இது போல எத்தனை குழுக்களை வேண்டுமானாலும் உருவாக்கிக் கொள்ளலாம். ஆனால் குறைந்தது இரு குழுக்களை யாவது உருவாக்க வே ண்டும்.




13. அங்குள்ள **Questions to Insert** என்னும் பகுதியின் கீழ் இடம்பெறும் எண்ணைச் சொடுக்கி ஒவ்வொரு குழுவிலிருந்தும் நமக்குத் தேவைப்படும் வினாக்களின் எண்ணிக்கையைக் குறிப்பிட வேண்டும்.




13. இவ்வாறாக குறைந்த அளவு 20 வினாக்கள் அமையுமாறு வினாக்குழுவை உருவாக்குவது நலம்.





14. அடுத்ததாக இதன் கீழ் உள்ள **CONFIRM** பட்டனைச் சொடுக்க வேண்டும்.



15. இப்போது CONFIRM பட்டன் மறைந்து அந்த இடத்தில் வந்துள்ள **CLICK FOR FINAL SUBMIT** பட்டனைச் சொடுக்க வேண்டும்.


16. இப்போது மேற்கண்ட படிவங்கள் யாவும் மறைந்து புதிய திரைதோன்றியிருக்கும். தேர்வுக்கான கால நேரம் ஒரு மணி நேரம் ஆகும். இதை **30** நிமிடங்கள் என மாற்றியமைக்க வேண்டும்.







17. இத்திரை யில் வலப்புறம் உள்ள EDIT பட்டனைச் சொடுக்க வேண்டும்.







18. இப்போது கீழே உள்ள **No. of Sets** இல் **2** மற்றும் **No. of versions** இல் **2** என்று நிரப்ப வேண்டும். எத்தனை வினாத்தாள்களை உருவாக்க வேண்டும் என்பதை No. of Sets களம் வழியாக முடிவு செய்யலாம். நாம் உருவாக்க உள்ள வினாத்தாள்களை எத்தனை வழிமுறைகளில் உருவாக்கலாம் என்பதை No. of versions களம் வழியாக முடிவு செய்யலாம். பொதுவாக .பிறகு **Generate Paper** பட்டனைச் சொடுக்க வேண்டும்.

19. இப்போது புதிதாகத் தோன்றியுள்ள **Start Allocation** பட்டனைச் சொடுக்க வேண்டும்.


20. புதிதாகத் திரையில் தோன்றியுள்ள தகவல்களை உறுதி செய்து **Allocate** பட்டனைச் சொடுக்க வேண்டும்.




21. திரையில் தோன்றும் வினாவுக்கு **OK** பட்டனைச் சொடுக்கி உறுதி செய்ய வேண்டும்.





22. வெற்றிகரமாகத் திட்டத்தைச் செயல்படுத்திய பிறகு இத்திரையை விட்டு வெளியேறலாம்.




23. இப்போது நாம் வெற்றிகரமாக மாணவர்களுக்கான வினாடி வினா வினாத்தாளையும் உருவாக்கி விட்டோம் . நம் வினாத்தாள்களை உயர் தொழில் நுட்ப ஆய்வகத்தின் வழி மாணவர்களுக்கு வழங்குவதற்கு நமக்கு இரண்டு வழிகள் உள்ளன.

    a. உயர் தொழில் நுட்ப ஆய்வகத்தின் சர்வர் கணினியில் உள்ள இணைய உலாவியைத் (Firefox web browser) திறந்து http://locsrv.in:8080 என்னும் இணைய முகவரியில் ஆசிரியர் தம் EMIS ID அல்லது பள்ளியின் UDISE எண் மற்றும் Password கொண்டு உள்நுழைய வேண்டும். பின்னர் வலப்பக்கத்தில் உள்ள Manage பட்டனைச் சொடுக்கி Fetch Events பகுதியில் உள்ள Update பட்டனைச் சொடுக்க வேண்டும்.





24. வினாத்தாள் நிகழ்வுகளை எந்தக் கணினி அல்லது திறன்பேசியில் இருந்தும் உருவாக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது. மேற்கண்ட செயல்பாடுகளில் ஏதேனும் குறைகள் ஏற்பட்டால் 14417 என்னும் எண்ணைத் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம்.

25. அடுத்ததாக வினாடி வினா நடை பெறும் நாளன்று ஆசிரியர் உயர் தொழில் நுட்ப ஆய்வகத்தில் உள்ள சர்வர் கணினியில் உள்ள இணைய உலாவியை


த் (Firefox web browser) திறந்து [http://locsrv.in:8080](http://locsrv.in:8080) என்னும் இணைய முகவரியை அணுக வே ண்டும்.

26.ஆசிரியர் தன்னுடை ய EMIS ID அல்லது பள்ளியின் UDISE எண் மற்றும் Password ஐப் பயன்படுத்தி அதன் வழியாக உள்நுழைய வேண்டும்.


27. அவர் உருவாக்கிய வினாத்தாள்கள் அதற்கான நிகழ்வுகளுடன் திரையில் அவருக்குத் தோன்றும்.




28. ஆசிரியர் தான் உருவாக்கிய நிகழ்வுக்கு எதிரே உள்ள **Download QP** பட்டனைச் சொடுக்கி பதிவிறக்கம் செய்ய வேண்டும். இப்பணியை வினாடி வினா தொடங்கும் நேத்துக்கு முன்பாகவே செய்திருக்க வேண்டும். இதற்குப் பிறகு ஆசிரியர் தன் EMIS ID இல் இருந்து வெளியேறி விடலாம். இச்செயலுக்குப் பிறகு தேவை இருப்பின் இணைய இணை ப்பையும் நிறுத்தி விடலாம்.




29. வினாடி வினா தொடங்கும் நேரத்திற்கு முன்பாகவே மாணவர்களை உயர் தொழில் நுட்ப ஆய்வகங்களில் உள்ள அனைத்து கணினிகளிலும் அமர வைக்க வேண்டும். மாணவர்கள் இணைய உலாவியைத் (Firefox web browser) திறந்து [http://locsrv.in:8080](http://locsrv.in:8080) என்னும் இணை ய முகவரியில் தங்கள் EMIS IDஜப் பயன்படுத்தி உள்நுழைய வே ண்டும்.





30. தற்போது திரையில் தெரிகின்ற தன் ஆசிரியரால் உருவாக்கப்பட்ட வினா நிகழ்வுக்கு எதிரே உள்ள **START** பட்டனை மாணவர் சொடுக்கி தேர்வைத் தொடங்கலாம். இந்த படிநிலை களில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் 14417 என்னும் எண்ணைத் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம்.

31. மாணவர்கள் தங்கள் ஆசியரால் உருவாக்கப்பட்ட வினாத்தாளைக் கொண்டு வளரறி மதிப்பீட்டை மேற்கொள்ளலாம்.





32. கடைசி வினாவுக்கு பதிலளித்து Submit பட்டனைச் சொடுக்குவதன் மூலமாக மாணவரால் விடைத்தாளை ஒப்படை க்க முடியும்.




33. விடை த்தாளை ஒப்படைத்த பிறகு தங்கள் செயல்திறனை மாணவர்கள்


திரையில் காண இயலும்.




34. இப்போது மாணவர் தங்கள் EMIS ID இலிருந்து வெளியேறலாம். தன்னுடைய முறை க்காகக் காத்திருக்கும் அடுத்த மாணவர் வினாடி வினா / வளரறி மதிப்பீட்டை மேற்கொள்ளலாம் .

35. வினாடி வினா / வளரறி மதிப்பீட்டை வெற்றிகரமாக அனைத்து மாணவர்களுக்கும் நடத்திய பிறகு, ஓர் ஆசிரியர் சர்வர் கணினியில் இணைய உலாவியைத் (Firefox web browser) திறந்து http://locsrv.in:8080 என்னும் இணை ய முகவரியில் தன்னுடை ய EMIS ID ஐக் கொண்டு உள்நுழைந்து தன்னுடைய மாணவர்கள் அனைவரின் செயல்திறனை யும் குறிப்பெடுத்துக் கொள்ளலாம்.



36. இதற்கு முன்பாக தேர்வுக்காக இணைய இணை ப்பை த் துண்டித்து வைத்திருந்தால் இப்போது மீண்டும் இணைய இணைப்பை ஏற்படுத்திக் கொள்ளலாம் . இதன் பிறகு இறுதியாக, ஆசிரியர் தங்கள் EMIS கணக்கில் வலப்பக்கம் உள்ள Manage பட்டனைச் சொடுக்கி **Send Responses** பிரிவின் கீழ் உள்ள Send பட்டனை அழுத்துவதன் மூலம் தங்கள் மாணவர்களின் செ யல்திறனை பிற்காலப் பயனுக்காகச் சே மித்து வைக்க வேண்டும்.

